بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/02/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**இறைவனின் தவ்ஹீதின் பின்னணியில் மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்களில் ஈமானை வலுப்படுத்தும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

எல்லா நபிமார்களும் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காகத்தான் உலகுக்கு வந்தார்கள். அவர்கள் தம் இன மக்களுக்கு அதைப் போதித்தார்கள். மாநபி (ஸல்) அவர்களும் இந்தத் தூதுச் செய்தியைத்தான் கொண்டு வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஷிர்குக்கு எதிராகக் கடுமையாகப் போராடினார்கள் எனில், சான்றில்லாமல் போராடவில்லை. மாறாக, (முதலில்) ஷிர்க்கின் தீமையைப் புரிய வைத்தார்கள். அதைப் புரிய வைத்து, அதற்கு எதிராக வெறுப்பை உண்டாக்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்கள் மீது அன்னாருடைய போதனை தாக்கத்தை ஏற்படுத்தியது எனில், அன்னாருடைய ஒவ்வொரு சொல்லும் செயலுமே இதன் உண்மையான வடிவமாக இருந்தன என்பதனால்தான் ஏற்படுத்தியது.

பிற இனத்தவர் தம் நபிமார்களை சஜ்தா செய்யும் இடமாக மாற்றிக் கொண்டது போன்று, இஸ்லாமிய உம்மத்திலும் இந்த அச்சுறுத்தும் தீச்செயல் தோன்றி விடக்கூடாது என்பது குறித்துதான் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்குப் பெருங்கவலை இருந்தது. திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் பல்வேறு முறைகளில் நமக்கு தவ்ஹீதுக்கான போதனை வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து அல்லாஹ் சூரா அன்பியாவில் இவ்வாறு கூறுகிறான்:

وَمَآ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَّسُوْلٍ اِلَّا نُوْحِيْٓ اِلَيْهِ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّآ اَنَا فَاعْبُدُوْنِ ﴿٢٦﴾

பொருள்: "மேலும், நாம் உமக்கு முன்னர் எத்தனை தூதர்களை அனுப்பியுள்ளோமோ அவர்களுள் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை; எனவே நீங்கள் என்னை (மட்டுமே) வணங்குங்கள் என்றே நாம் வஹீ அறிவித்தோம்." {21:26} திருக்குர்ஆனின் இறுதியில், அல்லாஹ் தனது தவ்ஹீதை இவ்வாறு அறிவித்துள்ளான்:

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ﴿٢﴾ اَللّٰهُ الصَّمَدُ ﴿٣﴾ لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ﴿٤﴾ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ﴿٥﴾

நீர் கூறுவீராக! அல்லாஹ் ஒருவனே ஆவான். அல்லாஹ் தேவையற்றவன். அவன் எவரையும் பெறவுமில்லை. எவராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு ஒருபோதும் எவரும் இணையும் இல்லை. {112:2-5}

அல்லாஹ் இங்கு எல்லாவிதமான ஷிர்க்கையும் மறுத்து அறிவித்துள்ளான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயல்பு எந்த அளவுக்குத் தூய்மையானதாக இருந்தது என்றால், தவ்ஹீத் மீதான அன்பு அன்னாருடைய நாடி நரம்புகளில் வைக்கப்பட்டிருந்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:-* மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில நிகழ்வுகளை எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் உம்மு அய்மன் அவர்கள் அறிவிக்கிறார்கள்: பவானா என்ற ஓர் சிலை இருந்தது. குறைஷியர்கள் அதற்குப் பெரிதும் கண்ணியம் அளித்து வந்தார்கள். அதனிடம் செல்வார்கள். அபூ தாலிப் அவர்களும் தம் சமுதாயத்துடன் அங்கே செல்வார்கள். பெருமானார் (ஸல்) அவர்களையும் உடன் அழைத்துச் செல்ல விரும்புவார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் மறுத்து விடுவார்கள். ஒருமுறை தம்முடைய மாமிமார்களுடைய கடுமையான வற்புறுத்தலினால் அங்கு சென்று விட்டார்கள்தான்; ஆயினும், மிகவும் அச்சமடைந்து திரும்பி வந்தார்கள். அன்னார், “நான் அங்கு ஒரு விந்தையான காட்சியைக் கண்டேன். நான் சிலைக்குப் பக்கத்தில் செல்லப் பார்க்கும்போதெல்லாம், ஒரு வெண்ணிற ஆடை அணிந்த நபர், ‘முஹம்மதே! பின்னால் இருப்பீராக! இந்த சிலையைத் தொடாதீர்!’ எனக் கூறுவார்” என்று கூறினார்கள்.

இறைவனால் நியமிக்கப்படுவதற்கு முன்பு ஓரிறைவனை வணங்குவதற்காக அன்னார் ஹிரா குகைக்குச் சென்று வந்தார்கள். அது மக்காவிலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ளது. தற்காலத்தில் அது நூர் மலை என அழைக்கப்படுகிறது. கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் நாற்பது வயதை அடைந்தபோது, ஒருநாள் ஜிப்ரீல் (அலை) அவர்கள் தோன்றினார்கள். அப்பொழுது மாநபி (ஸல்) அவர்களுக்கு முதல் முறையாக வஹீ இறங்கியது. முதல் வஹீ இறங்கியதுமே, பெருமானார் (ஸல்) அவர்கள் படைத்தவனின் ஓரிறைமையின் பக்கம் மக்களை அழைக்கத் துவங்கினார்கள்; இணைவைப்புக்கு எதிராகப் போதிக்கத் துவங்கினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நம்முடைய நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்த, ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாக இருந்தார்கள். அன்னார் தொலைந்து போயிருந்த உண்மையை மீண்டும் உலகிற்குக் கொண்டு வந்தார்கள். இந்தப் பெருமிதத்தில் நம்முடைய நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த நபியும் இணையில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முழு உலகையும் ஓர் இருளில் காணப் பெற்றார்கள். அன்னார் தோன்றியதனால் அந்த இருள் ஒளியாக மாறி விட்டது. எந்த சமுதாயத்தில் அன்னார் தோன்றினார்களோ, அந்த முழு சமுதாயமும்

இணைவைத்தல் எனும் ஆடையை அவிழ்த்து விட்டு, தவ்ஹீது எனும் ஆடையை அணிந்து கொள்ளாத வரை அன்னார் இறக்கவில்லை. இந்த அளவு மட்டுமல்ல, அதற்கும் மேற்பட்டு, அந்த மக்கள் ஈமானின் உயர்த்தரத்தை அடைந்து விட்டார்கள். உண்மை, நன்றியுணர்வு மற்றும் உறுதியான நம்பிக்கையின் எந்த செயல்கள் அவர்களிடம் வெளிப்பட்டனவோ அதற்கான எடுத்துக்காட்டு உலகின் எந்தப் பகுதியலும் காணப்படுவதில்லை.

இந்த வெற்றி, இந்த அளவு வெற்றி, மாநபி (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை. உலகம் மிகவும் அதிகமாக அறியாமை எனும் இருளில் மூழ்கியிருந்த அந்த நேரத்தில், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் உலகை விட்டு மறைந்தபோது, அது எத்தகைய காலமாக இருந்தது என்றால், லட்சக்கணக்கான மனிதர்கள் ஷிர்கையும், சிலை வணக்கத்தையும் விட்டுவிட்டு, ஓரிறைக் கொள்கையையும், நேர்வழியையும் மேற்கொண்டு விட்டிருந்தார்கள். இது ஒன்றே, மாநபி (ஸல்) அவர்களின் நபித்துவத்துக்கு மிகப் பெரும் சான்றாகும். நம்முடைய நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டியதன் அடிப்படையில், இரண்டாம் ஆதம் ஆவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அன்னார்தான் உண்மையான ஆதம் ஆவார்கள் என்றே சொல்ல வேண்டும். அன்னார் மூலமாகவும், அன்னாரின் பொருட்டாலும் அனைத்து மனிதச் சிறப்புகளும் முழு உயர்வை எட்டின.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* அந்தோ! இன்று முஹம்மதிய்ய உம்மத்தினரும், அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு வலியுறுத்திய தவ்ஹீதின் பெருமையை மறந்து கொண்டே செல்கிறார்கள். கலப்பற்ற தவ்ஹீதை மறந்ததன் காரணமாக, அல்லாஹ்வின் பண்புகள் மீதும், ஒரு முஸ்லிமின் தனிச்சிறப்பாக இருக்க வேண்டிய அந்தக் கலப்பற்ற ஈமான் இல்லை. இப்படிப்பட்ட நிலையில், மாநபி (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் அவர்களை ஏற்றுக் கொள்பவர்களின் பணி, தவ்ஹீதைப் புரிந்து, தமக்குள் சிறப்பான மாற்றங்களை உருவாக்குவதாகும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இது இறைவணக்கங்களுக்கான சிறப்பான மாதமாகும். ரமலானில் இதற்காக குறிப்பாக முயற்சி செய்ய வேண்டும். அதற்காக துஆ செய்ய வேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம்முடைய முழு வாழ்நாளிலும் தவ்ஹீதை நிலைநாட்ட எவ்வாறு முயற்சி செய்தார்களோ, அவ்வாறே, நாமும் அன்னாரை நேசிப்பதாக வாதம் புரிகிறோம் என்றால், நாம் தற்காக சிறப்பாக முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:- திருக்குர்ஆனில் அல்லாஹ் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களிடம் கூறுகிறான்: அல்லாஹ்வின் தூதர் முஹம்மதே! {(ஸல்)} நீர் உலகின் மூலை முடுக்கில் உள்ள

மக்களை எச்சரிப்பீராக. ஆனால், முதலில் உம் நெருங்கிய உறவினர்களை எச்சரிப்பீராக. ஏனெனில், அவர்களுக்கு உம் மீது இரட்டிப்பு உரிமை இருக்கிறது.

இதன்படி, ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தக் கட்டளையை செயல்படுத்தியவாறு, மக்காவின் வழக்கப்படி, சஃபா மலை மீது ஏறி நின்று கொண்டார்கள். மேலும், பல்வேறு கோத்திரங்களை ஒவ்வொன்றாகப் பெயரை எடுத்து அழைக்கத் துவங்கினார்கள். மக்கத்தினர் ஒன்று கூடியதும், கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள், "பாருங்கள்! இந்த மலைக்குப் பின்னால் ஒரு மிகப் பெரிய படை ஒன்றுகூடியிருக்கிறது; அது உங்கள் மீது தாக்குதல் தொடுக்க நினைக்கிறது என்று நான் சொன்னால், நீங்கள் நான் சொல்வதை நம்புவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'ஏன் இல்லை, நாங்கள் உங்கள் பேச்சை நம்புவோம். ஏனென்றால், நாங்கள் எப்பொழுதும் உங்களை நேர்மையாளராக, உண்மையாளராகக் கண்டிருக்கிறோம்' என்று கூறினார்கள். இதைக் கேட்ட மாநபி (ஸல்) அவர்கள், "மக்களே! கேட்டுக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு ஒரு முக்கியச் செய்தியைக் கூறுகிறேன். நான் அல்லாஹ்வின் புறமிருந்து தூதராக நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளேன். நீங்கள் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருக்க விரும்பினால், என்னைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார்கள். அன்னார் இவ்வாறு கூறியதுதான் தாமதம், உடனே அபூலஹுப் உத்வேகம் பொங்க, 'உம் மீது அழிவு உண்டாகட்டும் {நவூதுபில்லாஹ்}. இவ்வளவு சிறிய விஷயத்திற்காகவா நீர் எங்களை ஒன்று திரட்டினீர்?' என்று கூறலானான். இவ்வாறே மற்ற மக்களும் ஏளனம் செய்தவாறு சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு நபி அல்லது ரஸூல் இறைவன் புறமிருந்து அனுப்பப்படுகிறார். அவருடைய பிரிவு, மக்களுக்கு திறமை பெற்ற, நேர்மையான, துணிச்சல் மிக்க மற்றும் முன்னேறக்கூடிய ஒரு குழுவாகத் தென்படுகிறது. ஆகவே, அப்போது இருக்கின்ற சமுதாயங்கள் மற்றும் பிரிவுகளின் உள்ளங்களில், அவர் மீது கண்டிப்பாக ஒருவகையான பகைமையும், பொறாமையும் உருவாகி விடுகிறது..... அவைதான் மாநபி (ஸல்) அவர்களின் காலத்தில் இணைவைப்பாளர்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் அறிஞர்களை உண்மையை ஏற்பதை விட்டும் இழப்பிற்குரியவர்களாக ஆக்கி வைத்திருந்தன. கடுமையான பகைமைக்கு இணங்க வைத்து விட்டன என்றே சொல்ல வேண்டும். எனவே, அவர்கள் எப்படியாவது இஸ்லாத்தை உலகத்திலிருந்து அழித்து விட வேண்டும் என்ற சிந்தனையிலேயே மூழ்கி விட்டார்கள். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் குறைவாகவே இருந்தார்கள் என்பதனால், அவர்களுடைய எதிரிகள் முஸ்லிம்களுடன், அதாவது, சஹாபிகளுடன் கடுமையாகப் பகைமை பாராட்டினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எதிர்ப்பு வேகம் எடுத்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், அன்னாருடைய சஹாபா

பெருமக்களும் தொடர்ச்சியாக மக்கத்தினருக்கு இறைவனின் இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைக்கத் துவங்கினார்கள்:

“இந்த உலகைப் படைத்த இறைவன் ஒருவன் ஆவான்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை; எல்லா நபிமார்களும் ஓரிறைக் கொள்கையைப் பறைசாற்றி வந்தார்கள். தங்களுடைய சொந்த இனத்தவர்களையும் இதே போதனையின் பக்கம் அழைத்து வந்தார்கள். நீங்களும் ஓரிறைவன் மீது ஈமான் கொள்ளுங்கள். இந்தக் கற்சிலைகளை விட்டு விடுங்கள். இவை முற்றிலும் வீணானவையாகும்..... நீங்கள் பார்ப்பதில்லையா! இறைவனின் ஓரிறைமையை விட்டுவிட்டு உங்களுடைய சிந்தனைகளும் அசுத்தமாக இருக்கின்றன; உள்ளங்களும் இருளடைந்து விட்டன..... உங்களிடம் ஹலால் மற்றும் ஹராமுக்கு இடையிலான வேறுபாடும் இருக்கவில்லை. உங்களால் நல்லதையும் தீயதையும் பிரித்தறியவும் முடிவதில்லை. உங்கள் தாய்மார்களை கண்ணியக் குறைச்சலாக நடத்துகிறீர்கள். உங்கள் சகோதரிகள் மற்றும் மகள்கள் மீது அநீதியிழைக்கிறீர்கள். அவர்களுடைய உரிமைகளை நீங்கள் அவர்களுக்குக் கொடுப்பதில்லை. உங்கள் மனைவிமார்களுடன் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. அநாதைகளின் உரிமைகளைப் பறிக்கிறீர்கள். விதவைகளைக் கொடுமைப்படுத்துகிறீர்கள்.....

அவர்கள் இதையும் கூறினார்கள்: உரிமையாளர் ஒவ்வொருவருக்கும் அவருக்கான உரிமையை வழங்கிடுங்கள். இது இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகும்..... பெண்களுக்கு கண்ணியம் அளித்திடுங்கள். அவர்களுக்கான உரிமையை செலுத்திடுங்கள். அநாதைகளை அல்லாஹ்வின் அமானிதங்களாகக் கருதுங்கள். அவர்களைப் பராமரிப்பதை உயர்வகையான நன்மையாகக் கருதுங்கள். விதவைகளுக்கு ஆதரவாளர்கள் ஆகிடுங்கள். நீதி, நேர்மை மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, கருணை புரிதல் மற்றும் பெரும் நன்மை செய்தலை உங்களுடைய அடையாளமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.”

மக்கத்தினருக்கு இஸ்லாத்தின் பக்கம் ஆர்வம் ஏற்படத் துவங்கியதும், ஒருநாள் மக்காவின் தலைவர்கள் ஒன்றுகூடி, அபூதாலிப் அவர்களிடம் வந்தார்கள். அவர்களிடம், ‘நீங்கள் எங்கள் தலைவர் ஆவீர்கள். உங்களுக்காக நாங்கள் முஹம்மத் {(ஸல்) அவர்களை} ஒன்றும் சொல்வதில்லை. இப்பொழுது உங்களுடன் நாங்கள் இறுதி தீர்ப்பை மேற்கொள்ளும் தருணம் வந்து விட்டது. ஒன்று நீங்கள் அவருக்குப் புரிய வையுங்கள். அவர் எங்களிடம் என்னதான் எதிர்ப்பார்க்கிறார் என்று கேளுங்கள். அவர் கண்ணியத்தைப் பெறவோ, செல்வத்தைப் பெறவோ விரும்புகிறார் என்றால், நாங்கள் அதற்காக ஆயத்தமாக இருக்கிறோம். அவர் திருமணம் செய்ய விரும்புகிறார் என்றால், மக்காவின் எந்தப் பெண்ணை அவருக்குப் பிடித்திருக்கிறதோ அவளை அவருக்கு மணமுடித்து வைக்க ஆயத்தமாக இருக்கிறோம். அவர் எங்களுடைய சிலைகளைப் பழிப்பதை விட்டு விட வேண்டும் என்பது மட்டுமே எங்களுக்கு

வேண்டும். அவர் எங்களது பரிந்துரையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், இரண்டில் ஒன்று நடக்கும், ஒன்று நீங்கள் உங்கள் சகோதரர் மகனை விட வேண்டியது வரும். அல்லது, சமுதாயம் உங்கள் தலைமையை மறுத்து விடும்' என்று கூறினார்கள்.

அபூதாலிப் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அழைத்து, என் சகோதரர் மகனே! என் சமுதாயத்தினர் என்னிடம் இந்தச் செய்தியைத் தெரிவித்தனர்' என்று கூறினார்கள். அதற்கு நபி பெருமானார் (ஸல்) அவர்கள், “என் சச்சாவே! நீங்கள் உங்களுடைய சமுதாயத்தை விட்டு விடுங்கள்; எனக்குத் துணை நில்லுங்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், இணையற்ற ஓரிறைவன் மீது ஆணையாக! எனது வலக்கையில் சூரியனையும், இடக்கையில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்தாலும்சரி, அப்பொழுதும் என்னால் இறைவனின் ஓரிறைமையைப் போதிப்பதிலிருந்து விலகியிருக்க முடியாது. இறைவன் எனக்கு மரணத்தைத் தரும் வரை எனது பணியில் மூழ்கியிருப்பேன்” என்று கூறினார்கள். கலப்பற்ற தன்மை நிறைந்த இந்த பதில் அபூதாலிப் அவர்களின் கண்களைத் திறக்கப் போதுமானதாக இருந்தது. அவர்கள், 'என் சகோதரர் மகனே! நீர் சென்று உமது கடமையை நிறைவேற்றிக் கொண்டே இருப்பீராக. சமுதாயம் என்னை விடவிரும்பினால் தாராளமாக விடட்டும்; நான் உம்மை விட மாட்டேன்' என்று கூறினார்கள்.

தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், கண்ணியத்திற்குரிய சஹாபா பெருமக்களும் மக்கத்து கா∴பிர்கள் புறமிருந்து இழைக்கப்பட்ட அனைத்து வித அநீதியையும், வரம்புமீறல்களையும் பொறுத்துக் கொண்டார்கள். மக்கத்து கா∴பிர்களைப் போன்று, இன்றும் எந்த சமுதாயங்களிடம், இந்தத் தீமைகள் இருக்கின்றனவோ, அது அவர்கள் தவ்ஹீதை விட்டு விலகியிருப்பதன் காரணமாகவே இருக்கின்றன. தவ்ஹீதுக்கான அறிவிப்பை செய்து கொண்டே இருப்பதும், தவ்ஹீதுக்கான தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற அதே வேளையில், நம்முடைய ஆன்மிக, நல்லொழுக்க நிலைமைகளிலும், ஒரு தெளிவான மாற்றத்தை உருவாக்க முயற்சி செய்வதும் நமது வேலையாகும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் மு∴க்னீ)**